மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 76/2015

பெயர் : பழனிச்சாமி
சாட்சி – வா.சா–3 நாள்: 30.06.2025

---

**குறுக்கு விசாரணை (1, 3, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் வாதி ராமசாமி என்பவருக்கு சொந்தமான நிறுவனத்தில் 38 ஆண்டுகளாக மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் என்பதை காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் நிறுவனத்தின் பெயர் என்ன என்றாவது நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதாகும். வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதி தாக்கல் செய்த வழக்குரையை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

2. வாதி தனது வழக்குரையிலோ அல்லது தனது முதல் விசாரணை சாட்சியத்திலோ ஒவ்வொரு சொத்தையும் சர்வேயர் வைத்து அளந்து பார்த்து தான் கிரயம் பெற்றதாக சொல்லி உள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எப்போது எந்த சர்வேயர் வைத்து அளந்து அறிக்கையை பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதிக்கும் எந்தெந்த கிரையதாரர்களுக்கும் மத்தியஸ்தராக இருந்து கிரையம் பெற உதவியாக இருந்தேன் என்றால் ஆறு குட்டி வகையறா, கிருஷ்ண கவுண்டர், கணபதி கவுண்டர், விஜயன் ஆகியோர்களுக்கு இடையே இருந்தேன்.

3. நான் வாதி கிரயம் பெற்றதாக சொல்லும் ஆவணங்களில் ஒரு ஆவணத்திலாவது சாட்சி கையெழுத்து போட்டவராகவோ அல்லது இன்னார் என்று அடையாளம் காட்டிய சாட்சியாகவோ கையெழுத்துப் போட்டுள்ளேனா என்றால் இல்லை. சென்னியப்பன் வகையறாவிற்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்தினை வாதி கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள ஏழு கிரைய பத்திரங்களின் முந்தைய பத்திரங்களில் என்ன விஸ்தீரணம் போடப்பட்டுள்ளது, என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

4. மேற்படி கிரைய ஆவணங்கள் எந்த பத்திர அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி நீதிமன்றத்தில் மனுசெய்து வழக்கறிஞர் ஆணையர் மூலம் பௌதிக அமைப்பை பார்வையிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்துப் பார்க்கவில்லை. கடைசியாக அந்த பூமியை நான் எப்போது பார்த்தேன் என்றால் 2022 ஆம் ஆண்டு பார்த்தேன். நான் கடைசியாக பார்த்த போது பூமியில் சோளம் பயிரிடப்பட்டிருந்தது. நான் சொல்வது தவறு என்றும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையிலேயே பல ஆண்டுகளாக பூமி தரிசாக தான் உள்ளது என்று சொல்லி உள்ளார் என்றும் நான் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. வாதி ராமசாமி தாவா சொத்தில் எந்த விவசாயமும் எப்போதும் செய்ததில்லை என்றால் சரியல்ல. வாதி அவரது சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாது என்றும், நான் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி வாரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் 1, 3, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.06.30 18:17:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.